மேல்நிலைப் பள்ளிகளாக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள்.

*வினா எண் 589—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1978–79-ல், எத்தனை அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளுள் எத்தனை மேல் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1978–79-ல் 24 தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உயர்நிலைப்பள்ளிகளுள் நான்கு பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டன (Higher Secondary Schools).

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் தான் தாழ்த்தப்பட்ட, அரிசன மக்கள் வசிக்கிறார்கள். ஆகையால் அவர்கள் நகரங்களுக்குச் சென்று மேல்நிலைப் பள்ளிகளில் படிக்க முடிவதில்லை. ஆகவே, அவர்கள் நலன் கருதி அந்த உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, 4 உயர்நிலைப் பள்ளிகள் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் நலன் கருதி மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அவ்வாறு மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கு சில வரம்புகள், நியதிகள் இருக்கின்றன. படிப்படியாக இதர சில பள்ளிகளை மேல் நிலைப்பள்ளிகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள் 590 முதல் 599 வரை தள்ளிவைக்கப் பெறுகின்றன. கேள்வி நேரம் முடிவுற்றது.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]